2014 ஜூலை 31]

இன்றியமையாத பணி என்பதனால் முதன்முறையாகக் கழிவறைகளைப் பராமரிப்பதற்காக நேற்றையதினம் 160 கோடியே 77 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இதன்மூலம் 56 இலட்சத்து 55 ஆயிரம் மாணவ, மாணவிகள் பயன்பெறுவார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 297, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.*

297—

சுற்றுச்சூழல் மாசுபடுதல்

***29767—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:**

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டூரிலுள்ள இரசாயனத் தொழிற்சாலைகளால் ஏற்படும் சுற்றுச்சூழல் மாசுபடுதலைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் புனிதப் பாதங்களை வணங்குகிறேன்.*

மேட்டூரில் அமைந்துள்ள இரசாயனத் தொழிற்சாலைகளினால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்புகளைத் தடுக்கும்பொருட்டு தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் பல்வேறு தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது என்பதையும், மேலும், மேட்டூரில் அமைந்துள்ள அனைத்து இரசாயனத் தொழிற்சாலைகளும் வாரியம் நிர்ணயித்தபடி காற்று மாசுத் தடுப்புச் சாதனங்கள் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை அமைத்து முறையாக இயங்கி வருகின்றன என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2014 ஜூலை 31

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன், இருக்கையில் இல்லை.

வினா வரிசை எண் 298, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.என். கிட்டுசாமி, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

298—

மாணவர் விடுதி

***43208—திரு. ஆர்.என். கிட்டுசாமி:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மொடக்குறிச்சி தொகுதியிலுள்ள பல்கலைக்கழக கலை மற்றும் அறிவியல் உறுப்புக் கல்லூரி மாணவர்களுக்குப் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மூலமாக விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி தொகுதியிலுள்ள பல்கலைக்கழக கலை மற்றும் அறிவியல் உறுப்புக் கல்லூரியில் சுமார் 1,136 பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்கள் பயின்று வருகின்றனர். இதனருகில் விடுதிகள் ஏதுமில்லை. எனவே, இப்பகுதியில் கல்லூரி மாணவர் விடுதியைத் துவங்குவதற்கான தேவை மற்றும் சாத்தியக்கூறுகள் கண்டறியப்பட்டுள்ளன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்குக் கொண்டு செல்லப்பட்டு ஆய்வு செய்யப்படும்